**சார்பு நீதிமன்றம், காங்கயம்.**

Mcop.No. 105/2021
PW –2 - சரண்ராஜ்
தேதி : 04.11.2025

**சாட்சி ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. சாட்சி அழைப்பாணை வரவில்லை, மனுதாரர் அழைத்ததால் வந்துள்ளேன். எப்போது அழைத்தார் என்றால் நேற்று. மனுதாரர் எனக்கு என்ன உறவு என்றால் தெரிந்தவர். எவ்வளவு காலமாக அவரை தெரியும் என்றால் கடந்த 4 வருடமாக. எவ்வாறு தெரியும் என்றால் டீ கடைக்கு டீ குடிக்க வருவார் அந்த வகையில் அறிமுகம். அவரது தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அவர் எனது நெருங்கிய நண்பரா என்றால் இல்லை. முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை யார் கூறியது என்றால் நான் தான். நானும், மனுதாரரும் ஒரே பகுதியில் குடியிருக்கிறோமா என்றால் இல்லை. நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. மனுதாரரை நான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேனா என்றால் ஆம்புலன்சை தொடர்ந்து சென்றேன். எந்த ஆம்புலன்ஸ் என்றால் 108 ஆக இருக்கும். உள்ளே சென்று மருத்துவரை பார்த்தேனா என்றால் இல்லை.

2. காயம்பட்டவரை என்ன செய்தேன் என்றால் ஆம்புலன்ஸ் வந்தவுடன் ஏற்றிவிட்டேன். அவர் என்ன மாதிரியான நிலையில் இருந்தார் என்றால் சாதாரணமாக இருந்தார். விபத்திற்கு பின்னிட்டு எவ்வளவு நேரத்தில் ஆம்புலன்ஸ் வந்தது என்றால் சுமார் 1/2 மணி நேரம் ஆகியிருக்கும். அந்த சமயத்தில் அவரை ஆசுவாசப்படுத்தினேனா என்றால் அருகில் அமர்ந்து பேசினேன். விபத்து குறித்து யார் புகார் கொடுத்தது என்றால் தெரியாது. மனுதாரர் தான் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். செல்வகுமார், முத்துக்குமார் சம்பவத்தை நேரில் பார்த்து தன்னை தூக்கிவிட்டு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் தாராபுரம் அனுப்பிவைத்ததாக முதல் தகவலறிக்கையில் சொல்லியுள்ள நிலையில் சம்பவ இடத்திலேயே இல்லாமல் விபத்தை நேரில் பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் விபத்து நடந்த இடத்தில் இல்லை என்பதால் தான் என் பெயரை மனுதாரர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. பொய் சாட்சியம் அளிப்பதற்காக என் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றால் உண்மையை தான் கூறுகிறேன்.

3. மது போதையில் கவனக்குறைவுடன் தவறான திசையில் வாகனத்தை ஓட்டி சென்று மனுதாரர் தன்னிச்சையாக விபத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. கார் ஓட்டுநர் மீது தவறு ஏதும் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரர் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S SANTHANA KRISNASAMY

Digitally signed by S SANTHANA KRISNASAMY
Date: 2025.11.04 15:21:46 +0530

சார்பு நீதிபதி,
காங்கயம்.